கூட்டமைப்பினைச் சார்ந்த, இந்தியாவுடனான நல்லுறவிற்கான நாடாளுமன்ற குழுவினர், நம் அம்மா அவர்கள் அறிவித்துள்ள திட்டங்களைக் கேள்வியுற்று, இவ்வளவு நலத் திட்டங்களை எவ்வாறு செய்கின்றார்கள் என்று வியந்து பாராட்டிச் சென்றார்கள் என்பது மிகவும் மகிழ்ச்சியான ஒன்று. (மேசையைத் தட்டும் ஒலி) அந்த அளவுக்கு அம்மாவின் புரட்சிகரமான திட்டங்கள் இந்தியாவிற்கே, ஏன் உலகத்திற்கே முன்னோடியான திட்டங்கள் (மேசையைத் தட்டும் ஒலி) என்று உலகத்திலுள்ள அனைவருமே பாராட்டுகின்றனர்.

அதைப்போல சர்வதேசத் தரத்திலான பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையமாகத் திகழும் கும்மிடிப்பூண்டியிலுள்ள ஓட்டுநர் பயிற்சிப் பிரிவைத் தரம் உயர்த்த அறிவிப்பு வெளியிட்டமைக்கும் மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களுக்கு எனது நெஞ்சார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

5. அறிக்கைகள் அளித்தல்

(அ) பொது நிறுவனங்கள் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: குழுக்களின் அறிக்கைகள் அளித்தல். பொது நிறுவனங்கள் குழுவின் அறிக்கைகள் அளித்தல். மாண்புமிகு உறுப்பினர் திரு. வி. சோமசுந்தரம், பொது நிறுவனங்கள் குழுவின் தலைவர்.

முற்பகல் 11-25

***திரு. வி. சோமசுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏழைகளின் விடிவெள்ளியாக, எங்களின் உயிர் மூச்சாக, சோதனைகளையெல்லாம் சாதனைகளாக்கி, சாதனைகளையெல்லாம் சரித்திரங்களாக்கக்கூடிய ஆற்றல் படைத்த எங்கள் இதய தெய்வம் தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பொற்பாதங்களை வணங்கி, 2011-2012 ஆம் ஆண்டிற்கான பொது நிறுவனங்கள் குழுவின் 29 முதல் 36 வரையிலான 8 அறிக்கைகளை இக்குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கின்றேன்.